# TAMILNADU BUDGET 2026-27



தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்

# தமிழக இடைக்கால பட்ஜெட் 2026-27

## வருவாய் பற்றாக்குறை ரூ.48,000 கோடி; கடன் சுமை ரூ. 10.71 லட்சம் கோடி

**சென்னை, பிப். 17:** 2026-27-ஆம் நிதியாண்டுக்கு ரூ.2.55 லட்சம் கோடியில் தமிழக அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்தார்.

அதில், தமிழகத்தின் வருவாய்ப் பற்றாக்குறை ரூ. 48,696 கோடியாகவும், நிலுவைக் கடன் சுமை ரூ.10.71 லட்சம் கோடியாகவும் அதிகரிக்கும் என மதிப்பிடுவதாகவும் அவர் தெரிவித்தார். தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்ததற்கான காரணத்தையும் அமைச்சர் தங்கம் தென்னரசு பட்டியலிட்டார்.

தமிழகத்தில் விரைவில் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, 2026-27 -ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசியதாவது:

வரி விதிப்பின் உரிமை மத்திய அரசிடமும், மக்கள் நலனுக்காக பெரும் செலவை ஏற்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுகளிடமும் இருப்பது தான் நிதி தொடர்பான அனைத்துச் சிக்கல்களுக்கும் அடிப்படைக் காரணமாகும்.

இதை மாற்றுவதற்கு அரசமைப்...

இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பு முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்ற நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு.

### ஜூலையில் புதிய அறிவிப்புகளுடன் பொது பட்ஜெட்: முதல்வர் ஸ்டாலின்

வரும் ஜூலை மாதம் புதிய அறிவிப்புகளுடன் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் நம்பிக்கை...

வரி வசூலை மேம்படுத்துதல், வரி வசூல் நிர்வாகத் திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளால் வருவாய்ப் பற்றாக்குறை 2027-28-இல் ரூ.42,964.61 கோடியாகவும், 2028-29-இல் ரூ.35,115.33 கோடியாகவும் குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது கூடுதல் மூலதனச் செலவினத்துக்கு வழிவகை செய்யும்.

**கடன் சுமை:** ரூ. 1,78,308.05 கோடி அளவுக்கு மொத்தக் கடன் பெறத் திட்டமிட்டுள்ளது. இதில், ரூ.60,418.42 கோடி மதிப்பிலான பொதுக் கடனை அரசு திருப்பிச் செலுத்துவதால் அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி நிலுவைக் கடன் ரூ. 10,71,770.34 கோடியாக இருக்கும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 26.35 சதவீதமாகும்.

இது 2027-28-இல் 25.30 சதவீதமாகவும், 2028-29-இல் 25.43 சதவீதமாகவும் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நலத் திட்டங்கள் தொடரும்:** தற்போதைய பொருளாதார சூழலில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைவிட தமிழகத்தின் வளர்ச்சி அதிகமாக உள்ளது. இதே நிலை நீடிக்குமானால், வள ஆதாரங்...


தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள்
விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி, வேலூர், காரைக்குடி, திருப்பூர் ஆகிய 7 நியோ டைடல் பூங்காக்கள் திறக்கப்பட்டுள்ளன
நாமக்கல், திருவண்ணாமலை, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, நாகப்பட்டினம், கரூர், புதுக்கோட்டை ஆகிய 9 நியோ டைடல் பூங்காக்கள் ரூ.388 கோடியில் பணிகள் நடைபெற்று வருகின்றன


சுயஉதவிக் குழுக்கள்
6,23,529 சுயஉதவிக் குழுக்கள் 1,41,718 கோடி ரூபாயை வங்கிக் கடனுதவியாக பெற்றுப் பயனடைந்திட அரசு வழிவகை செய்துள்ளது.
சுய உதவிக் குழு மகளிரின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையைப் பெருக்கிட 'வாழ்ந்து காட்டுவோம்' முதலான சீர்மிகு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.


இடைக்கால பட்ஜெட் -2026
சோழர் அருங்காட்சியகம், நொய்யல் அருங்காட்சியகம், எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் வெண்கல அருங்காட்சியகம், திருவண்ணாமலையில் தமிழர் பண்பாட்டு அருங்காட்சியகம் ரூ.287 கோடி மதிப்பில் அமைக்கப்படும்


இடைக்கால பட்ஜெட் - 2026
"விடியல் பயணத்தால் மகளிர் மாதந்தோறும் ரூ.888 சேமிக்கின்றனர்"


அதிகாரம்
நாட்டிலேயே முதன்முறையாக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது



அன்புச்சோலை
மூத்த குடிமக்களுக்காக..
மூத்த குடிமக்களுக்காக 25 இடங்களில் அன்புச் சோலைகள் தொடங்கப்பட்டுள்ளன
தாயுமானவர் திட்டத்தின் கீழ் மூத்த குடிமக்களுக்கு ரேசன் பொருட்கள் வீடு தேடிச் சென்று வழங்கப்படுகின்றன


1179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
தொழில் முதலீடுகள் பெருமளவில் ஈர்க்கப்பட்டுள்ளன. 36 லட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் ரூ.13.3 லட்சம் கோடி அளவிற்கு இதுவரை 1179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன


பட்ஜெட்
குழந்தைகள் நலனுக்காக...
குழந்தைகள் பசியுடன் வரும் நிலையை மாற்றி பசி நீங்கிடும் வகையில் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தால் மாணவர்கள் வருகை அதிகரித்து கற்றல் திறனும் அதிகரித்துள்ளது
பெற்றோரை இழந்த குழந்தைகளை பாதுகாத்திடும் வகையில் 18 வகையிலான பள்ளிப்படிப்பை பயில அன்புக் கரங்கள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன
- தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு


பணிபுரியும் மகளிர் விடுதி
தோழி
Working Women's Hostel
தோழி விடுதிகள்
கிராமப்புறப் பகுதிகளில் பயின்று கல்வி பெற்று, பணிவாய்ப்பின் பொருட்டு நகரங்களுக்கு வரும் மங்கையர் பாதுகாப்பாக தங்கிட நவீன வசதிகளுடன் கூடிய 19 தோழி விடுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன


இடைக்கால
பட்ஜெட்
2026-27
அன்புக் கரங்கள்
திட்டம்
தொடங்கி வைப்பவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
15.09.2025
'அன்புக் கரங்கள்' திட்டம்
பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்துப் பாதுகாத்திடும் வகையிலும், அக்குழந்தைகள் இடைநிற்றல் இன்றி 18 வயது வரையிலான பள்ளிப்படிப்பினைத் தொடர, மாதம் 2,000 ரூபாய் வழங்கும் 'அன்புக் கரங்கள்' திட்டத்தின் கீழ் இதுவரை 10,637 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்



நான் முதல்வன் To
வெற்றி நிச்சயம் திட்டம்...
இடைக்கால
பட்ஜெட்
2026-27
'கல்லூரிக் கனவு' இத்திட்டத்தில், 2 லட்சத்து 68,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.
நான் முதல்வன் திட்டத்தின்கீழ், இதுவரை கல்லூரி மாணவர்களுக்கு 48,65,050 திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
'வெற்றி நிச்சயம் திட்டம்' மூலம் 16 ஆயிரத்து 815 இளைஞர்கள் பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்றுள்ளனர்: 70 ஆயிரத்து 500 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.
நான் முதல்வன்
- தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு



இடைக்கால
பட்ஜெட்
2026-27
உங்கள் தொகுதியில்
முதலமைச்சர்
திட்டம்!
உங்கள் தொகுதியில் முதலமைச்சர்
உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் 15,467 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,410 பணிகள் எடுக்கப்பட்டு, 1,394 பணிகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, 808 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன;
ஏனைய 586 பணிகள் நடைபெற்று வருகின்றன
- தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு


திராவிட மாடலின்
ஐந்தாண்டு சாதனைத் திட்டங்களில் சில...
கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
1.31 கோடி பெண்களுக்கு மாதம் ரூ.1000
உலகம் உங்கள் கையில்
10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி
மகளிர் விடியல் பயணம்
881 கோடி பயணங்கள்
நான் முதல்வன்
48,65,050 திறன் பயிற்சிச் சான்றிதழ்கள்
புதுமைப்பெண்
6,95,296 மாணவிகளுக்கு மாதம் ரூ.1000
முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்
19.34 லட்சம் மாணவர்கள் பயன்
தமிழ்ப்புதல்வன்
5,40,511 மாணவர்களுக்கு மாதம் ரூ.1000
மகளிர் சுய உதவிக் குழுக்கள்
ரூ. 1,41,718 கோடி வங்கிக் கடன்


திராவிட மாடலின்
ஐந்தாண்டு சாதனைத் திட்டங்களில் சில...
உங்களுடன் ஸ்டாலின்
10,000 முகாம்கள், 38.48 லட்சம் மனுக்களுக்குத் தீர்வு
தாயுமானவர்
27,40,703 முதியோர்கள் & மாற்றுத்திறனாளிகள் பயன்
நலம் காக்கும் ஸ்டாலின்
1,206 மருத்துவ முகாம்கள், 17,82,687 பயனாளிகள்
அன்புக்கரங்கள்
10,637 குழந்தைகளுக்கு மாதம் ரூ. 2,000
இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48
காப்பாற்றப்பட்ட உயிர்கள் 5,11,916
உங்கள் தொகுதியில் முதலமைச்சர்
ரூ. 15,467 கோடி, 1,410 பணிகள்
மக்களைத் தேடி மருத்துவம்
2.53 கோடி பயனாளிகளுக்கு முதல்முறைச் சேவைகள், 4.75 கோடி பயனாளிகளுக்குத் தொடர் சேவைகள்
மக்களுடன் முதல்வர்
4,835 முகாம்கள், 23.50 லட்சம் மனுக்களுக்குத் தீர்வு


திராவிட மாடலின்
ஐந்தாண்டு சாதனைத் திட்டங்களில் சில...
கலைஞரின் கனவு இல்லம்
1,71,000 வீடுகள் பணிநிறைவு, 2030-க்குள் 8 லட்சம் வீடுகள்
முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்
ரூ. 8,911 கோடி, 20,484 கிமீ சாலைகள்
TAPS – உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம்
ரூ. 11,000 கோடி ஒதுக்கீடு
87 கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள்
ரூ. 15,591 கோடி, 1 கோடியே 65 லட்சம் பேர் பயன்
அரசுப் பணி நியமனங்கள்
1,55,131 பேர்
30 முதல்வர் படைப்பகங்கள்
ரூ. 104 கோடி ஒதுக்கீடு
வீட்டுமனைப் பட்டாக்கள்
23,56,623 பயனாளிகள்
38 புதிய கலை & அறிவியல் கல்லூரிகள்
18,760 மாணவர்கள் பயன்
அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்
ரூ. 420 கோடி மானியம், 4,948 ஆதிதிராவிடர் & பழங்குடியினர் பயன்







| துறை | ஒதுக்கீடு |
|---|---|
| கல்வி | ₹ 48,534 கோடி |
| ஊரக வளர்ச்சி | ₹ 29,465 கோடி |
| நகர்ப்புற வளர்ச்சி | ₹ 28,687 கோடி |
| மக்கள் நல்வாழ்வு | ₹ 22,090 கோடி |
| நெடுஞ்சாலைகள் | ₹ 21,132 கோடி |
| மின்சாரத்துறை | ₹ 18,091 கோடி |
| போக்குவரத்து | ₹ 13,062 கோடி |
| நீர் வளம் | ₹ 10,076 கோடி |
| உயர் கல்வி | ₹ 8,505 கோடி |
| குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தொழில்கள் | ₹ 6,225 கோடி |
| சமூக நலன் | ₹ 5,463 கோடி |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் | ₹ 3,934 கோடி |




| துறை | ஒதுக்கீடு |
|---|---|
| நகராட்சி நிர்வாகம் | ரூ.28,827 கோடி |
| சுகாதாரத் துறை | ரூ.22,090 கோடி |
| சிறப்பு திட்ட செயலாக்கத்துறை | ரூ.17,088 கோடி |
| தொழிலாளர் நலத்துறை | ரூ.1,996 கோடி |
| பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் | ரூ.1,634 கோடி |
| மாற்றுத்திறனாளிகள் நலத்துறை | ரூ.1,471 கோடி |
| சுற்றுலாத்துறை | ரூ.1,394 கோடி |
| இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு | ரூ.718 கோடி |
| நதிகள் மேம்பாட்டு திட்டங்களுக்கு | ரூ.374 கோடி |
| ஐடி & தொலைத்தொடர்பு | ரூ.219 கோடி |

# AGRICULTURE – BUDGET 2026-27













தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் மூலம் 12 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.178 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
வேளாண் காடுகளை ஊக்குவிக்க தமிழ்நாட்டின் வேளாண் காடுகள் கொள்கைக்கு ஒப்புதல்; வேளாண் துறையை மேம்படுத்த அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.


கேழ்வரகு உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம்: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
எண்ணெய் வித்து பரப்புகளை அதிகரிக்க ரூ.229 கோடி ஒதுக்கீடு: உர விதைகளை வழங்க 1,000 உழவர் நல சேவை மையம்


தமிழ்நாட்டில் 4,150 சூரிய சக்தி பம்புசெட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு 2 லட்சம் புதிய இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்
அரசின் நடவடிக்கையால் 3.48 லட்சம் ஹெக்டர் நிலங்களுக்கு கூடுதலாக பாசன வசதி கிடைத்துள்ளது


496 பட்டதாரி இளைஞர்கள், வேளாண் சார்ந்த தொழில்கள் தொடங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.
20 லட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன
விரைவில் வேளாண் காடுகள் கொள்கை வெளியிடப்பட உள்ளது : வேளாண் பட்ஜெட்டில் தகவல்


2026-27
தமிழ்நாடு
வேளாண்மை
நிதிநிலை அறிக்கை
தமிழ்நாடு வெல்லட்டும்
வெல்வோம் ஒன்றாக!
சோழவந்தான் வெற்றிலை
பண்ருட்டி பலாப்பழம்
பண்ருட்டி முந்திரி
விருதுநகர் சம்பா வத்தல்
இராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி
புளியங்குடி எலுமிச்சை
செட்டிக்குளம் சின்ன வெங்காயம்
தூயமல்லி அரிசி
கவுந்தப்பாடி நாட்டுச்சர்க்கரை
9 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு


2026-27
தமிழ்நாடு
வேளாண்மை
நிதிநிலை அறிக்கை
தமிழ்நாடு வெல்லட்டும்
வெல்வோம் ஒன்றாக!
கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி
மற்றும் சென்னையில் நான்கு
உணவுப் பரிசோதனை ஆய்வகங்கள்
(Food Testing Laboratory)